# “சித்தர் இலக்கியங்களில் உலக சிந்தனைகள்”

113

**இரா.கோகிலவாணி கார்த்திகேயன்**

**கட்டுரைச் சுருக்கம் :-**

தமிழ்மொழியின் தொன்மையை அறிந்தவர்கள் , அதன் பரந்து விரிந்த தன்மையைப் பற்றித் தெரிந்திருப்பார்கள். தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் தொடங்கி , இன்று வரை பல நூல்கள் தமிழில் இயற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. உலக இலக்கியங்கள் வகைப்படுத்தப்பட்டதைப் போன்று , தமிழ் இலக்கியமும் சங்கமருவிய காலத்து இலக்கியங்கள் , சங்ககால இலக்கியம், அற இலக்கியம் எனத்தொடங்கி இக்கால இலக்கியம் என பல வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதில் ஒன்றுதான் சித்தர் இலக்கியம் ஆகும். சித்தர் இலக்கியத்தின் சிறப்பு “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற ஒருமித்த கருத்தை உலகெங்கும் வாழும் சித்தர்கள் ஒன்று போலக் கூறியிருப்பதுதான்.

தமிழ்நாட்டில் பதினெண்சித்தர்கள் மற்றும்பிற்காலத்துச் சித்தர்கள் என பல சித்தர்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் இயற்றியுள்ள பாடல்களும் ,வாய்மொழியாகப் பாடியுள்ள பாடல்களும் சேர்த்து சித்தர் இலக்கியம் என்றழைக்கப்படுகின்றன. ஆண்டுகள் பல கடந்தும் சித்தர் பாடல்களில் உள்ள கருத்துகள் எந்த வித பேதமின்றி உலக மக்களுக்கு பொதுவானவையாகவே இருந்து வருகின்றன. உடல்நலம், மனநலம், யோகம், வானியல் அறிவு, சோதிடம் என பல துறைகளைச் சார்ந்த சிந்தனைகளைத் தம் பாடல்களில் கூறிச் சென்றுள்ளனர் சித்தர்கள்.இன்றைய கொரானா என்னும் பெருந்தொற்று நோய்க்குக் கூட நம்முடைய சித்தர்கள் கூறிச் சென்ற சூரணங்கள் பெரிதும் உதவி செய்தன.

சித்தர்கள் பாடிய பாடல்களின் மொழி , பாடலமைப்பு, இலக்கணம் இவையெல்லாம் வெவ்வேறாயிருப்பினும் அவர்களின் நோக்கம் எப்போதும் மக்களின் வாழ்வினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வதுதான்.

**முன்னுரை:-**

உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் தேவையான மூன்றினுள்முதன்மையானது உணவு. ஓரறிவு முதல் ஆறறிவுபெற்ற உயிர்கள் வரை அனைத்தும் உணவு தேடுவதற்காகவே தம் புலனறிவில் ஒவ்வொன்றாக மேம்பட்டு வந்திருக்கின்றன. ஒவ்வொரு புலனும் பெறப்பெற உறைவிடம் நோக்கி தமது தேடல்களைத் தொடர்ந்தன. இப்படித்தான் ஐந்தறிவு பெற்ற விலங்குகள் சற்று மேம்பட்டு தனது கூடு , தனது இடம் என வரையறை செய்து வாழத்தொடங்கின. விலங்குகளுக்குப் பின் வந்த ஆறறிவு பெற்ற மனிதன் , தனது ஆறாம் அறிவின் துணை கொண்டு உலகினை இன்னும் ஆழமாக புரிந்து கொள்ளத் தொடங்கினான். தனது நுண்ணிய அறிவால் சுற்றுப்புறங்களைப் பற்றி அறிந்து கொள்ளத் தொடங்கினான். எங்ஙனம் விலங்குகளை வேட்டையாடுவது என்பதைப் புரிந்து கொண்டான் . அதற்கு வேண்டிய ஆய்தங்களைச் செய்து கொள்ளத் தொடங்கினான். பின்னர் தாவரங்களைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவற்றை உண்ணும் போது தம் உடலில் ஏற்படும் மாற்றங்களைத் தெரிந்து கொண்டான். நெருப்பு என்ற ஒன்றை உண்டாக்கத் தெரிந்தவுடன் மனித வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் அளப்பரியன. படிப்படியாக விலங்குகள் மற்றும் தாவரங்களைச் சமைத்துண்ணும் முறைகள் பற்றி அறிந்து கொண்டான். ஒரு வளர்ச்சியடைந்த விலங்கு போல் வாழத் தொடங்கிய மனிதர்கள் மெதுவாக தாம் விலங்கிலிருந்து மாறுபட்டவர்கள் என்பதைப் புரிந்து கொண்டார்கள். அதுவரை தனக்கு வெளியே உள்ள உலகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டவர்கள் அதன்பின் தனக்கு உள்ளே உள்ள உலகத்தைப் பற்றி உணரத்தலைப்பட்டனர். அங்ஙனம் உணரந்தவர்கள் ஒருசிலரே எனினும்அவர்களின் சிந்தனைகள் மிகவும் உயர்ந்ததாக இருந்தன. அதன் விளைவாகவே சித்தர்கள் என்னும் மரபு தோன்றியது. அங்ஙனம் தமிழில் தோன்றிய சித்தர்கள் தமது கருத்துகளைப் பாடல்களாகவோ , வாய்மொழியாகவோ சொல்லிச் சென்றனர். தமிழர் இலக்கியத்தில் சித்தர்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இலக்கியம் என்பது தவிர்க்க முடியாத இலக்கியமாக இருந்து வந்திருக்கின்றது. அத்தகைய இலக்கியத்தில் பரவியுள்ள சிந்தனைகள் தமிழருக்கானவை மட்டுமல்லாது உலக மக்களுக்கான பொதுவான சிந்தனைகளைக் கொண்டது.

**சித்தர்களும் சித்தர் பாடல்களும்:-**

சித்தர் என்ற சொல் சித்தம் , சித்தி என்ற சொற்களிலிருந்து தோன்றியுள்ளது. சித்தம் என்றால் நிறைந்த சிந்தனைகள் கொண்டவர் என்று பொருள். சிந்தனைகள் என்பது ஒருவரின் உள்ளத்தில் ஏற்படும் உயர்ந்த எண்ணங்களின் விளைவாக , ஐயங்களின் விளைவாக அவர்களுக்குள் தோன்றுவது ஆகும். அப்படி உயர்ந்த சிந்தனைகள் கொண்டவர்கள் சித்தர்கள் என்று அ்ழைக்கப்பட்டனர்.

***அ) அகத்தியர் என்னும் சித்தர்:-***

தமிழில் முதலில் தோன்றிய சித்தர் அகத்தியர் ஆவார். அவர் இயற்றிய நூல் அகத்தியம் ஆகும். இதுவே, தமிழ் இலக்கணத்துக்கான , முதல் நூலாகத் திகழ்ந்தது என்று ம்,இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்த து என்றும் தமிழாய்வாளர்கள் எண்ணுகின்றனர். தற் பொழுது நம்மிடம் உள்ள மிகப் பழமையான தமி ழ் இலக்கண நூலான தொல்காப்பியத்துக்கு மூலநூலும் இதுவே . இப்போது அகத்திய மலை என்றழைக்கப்படும் தாமிரபரணி ஆறு ஓடும் மலைப்பகுதிகளில் அவர் வாழ்ந்து வந்திருப்பதற்கான சான்றுகள் தேடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே நேரம் அகத்தியர் என்னும் பெயரில் பல சித்தர்கள் வாழ்ந்து வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. அகத்தியர் நாடி சோதிடம் , மருத்துவம், வேதியியல், ஞானமடைதல் என பல துறைகளில் நூல்களை இயற்றியுள்ளார். இவையாவும் இன்றளவும் உலக மக்களுக்குப் பயன்படுகின்றன. மேலும் அவற்றில் உள்ள கருத்துகள் உலகத்தினர்க்குப் பயன்தரும் வகையில் இன்னும் ஆய்வுக்கு உட்படுத்தபட்டுக் கொண்டிருக்கின்றன.

***ஆ) திருமூலர் என்னும் சித்தர்:-***

தமிழர் பதினண்சித்தர் மரபில் முதன்மையானவர் திருமூலர் ஆவார். இவரைப் பற்றிப் புராணக்கதை ஒன்றும் கூறப்பட்டு வருகிறது , கூடு விட்டு கூடு பாயும் ஞானம் கொண்டவர் திருமூலர் ஆவார். அவர் எழுதிய திருமந்திரம் என்னும் நூல் 3000 பாடல்கள் கொண்டது. அவற்றுள் பாயிரம் , கடவுள் வாழ்த்து தவிர மீதமுள்ள பாடல்கள் ஒன்பது தந்திரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தந்திரத்தின் தலைப்புகள், திருக்குறளின் அதிகாரத் தலைப்புகளுக்கு ஒப்பாக இயற்றப்பட்டவை போல உள்ளன. எடுத்துக்காட்டாக திருமந்திரத்தில் வான்சிறப்பு , கல்வி, கல்லாமை, நடுவுநிலைமை, அன்புடைமை என்ற தலைப்புகளில் பாடல்கள் உள்ளன. கல்வி என்னும் அதிகாரத்தில் ஆறாம் பாடலில் கல்வியின் அருமை பற்றி, “சிறந்த நூலேணி ஒன்றைப் பற்றி ஏறுவோர் , மதிலின் உச்சிவரை ஏறி கோட்டை என்னும் மெய்யறிவைப் பெறுவர். அங்ஙனம் சிறந்த நூலேணியில் ஏறாது , வேறுவழி தேடிச் செல்லுபவர் , உச்சிவரை ஏற இயலாததால் அவர் ஒரு பயனும் அடையவதில்லை”என்றுகுறிப்பிடுகிறார்.

**“நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்**
**பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடும்”[1]**

இச்சிந்தனை மிகவும் உயர்ந்த சிந்தனை. ஒருவர் கல்வி கற்றால் அவர்க்குச் சிறப்பு தரும் என்பதைத் தாண்டி , கற்கும் கல்வி சிறந்ததாக இருந்தால் மாத்திரமே மெய்யறிவு கிட்டும் என்னும் மறைபொருளையும் உணர்த்தி நிற்கிறது.

மேலும் எட்டாம் தந்திரத்தில் ‘அவா அறுத்தல்’ என்னும் தலைப்பில் “தேவையற்ற உலக ஆசைகளை விட்டொழியுங்கள், ஆசை வர வர துன்பங்கள் பெருகும் ; ஆசைகள் நீங்க இன்பம் பெருகும் என்று அறிவுறுத்துகிறார்.” இது புத்தரின் கருத்துக்கு ஒப்பானதாக உள்ளது. ***“ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்***

***ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்***
***ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்***
***ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.”[2]***



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அதாவது “ஆசையை விட்டு விடுங்கள் ; இறைவன் அருள் கிடைத்தபின்பும் , பழக்கத்தால் உங்களுக்குள் தோன்றும் ஆசைகளைக் கண்டுணர்ந்து விட்டு விடுங்கள் ; ஆசைகள் கூடகூட துன்பங்களும் உடன் வரும் என்றும் ஆசையை விடவிட ஆனந்தமே” என்று ஒரு சிறந்த உலக சிந்தனையை மிக எளிய சொற்களில் கூறிச் சென்றுள்ளார் திருமூலர்.

***இ) குதம்பைச்சித்தர்:-***

குதம்பை என்பது காதில் அணியப்படும் அணிகலன்களுள் ஒன்று. குதம்பை அணிந்த பெண்ணை, “குதம்பாய்” என விளித்து பாடல்கள் இயற்றியதால் குதம்பைச் சித்தர் என்று அழைக்கப்படுகிறார்.பதினெண் சித்தர்களில் ஒருவ ர் ஆவார். இவர் சாதி என்னும் கொடிய நோய் மக்கள் மனதில் புரையோடிருந்ததை அவர்களுக்கு உணர்த்தி , மக்களைத் திருத்தும் வகையில்,

***“சாதியொன்றில்லை சமயமொன்றில்லை யென்று***
***ஓதி யுணர்ந்தறிவாய் – குதம்பாய்***
***ஓதி உணர்ந்தறிவாய்.”*** [3]

என்று பாடுகிறார். உலகில் சாதி, இனம், மொழி, நிறம் என ஏதேனும் ஒன்றனைப் பற்றிக் கொண்டு அதன் பொருட்டு தம்மினும் கீழான மனிதர்களைத் துன்புறுத்துதல் என்பது இன்றுவரை மக்களிடையே இருந்து வருகிறது. அவர்களுக்கெல்லாம் ஓர் நல்லாசானாக நமது சித்தர் பாடல்கள் அமையப்பட்டிருக்கின்றன.

மேலும் கடவுளைத் தேடும் பொருட்டு , தேவையற்ற சடங்குகள் செய்து சிலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர். மக்களும் மெய்யறிவு அடைந்து விடும் வேட்கையில் கண்மூடித்தனமாக அவர்கள் பின் செல்கின்றனர். இவ்வாறு மக்களைத் தவறாக வழிநடத்தும் கூட்டத்தினரை மட்டுமன்றி , அவர்கள்பின் செல்லும் மக்களையும் சாடுகின்றார்.

***“நித்திரை கெட்டு நினைவோடு இருப்பார்க்கு***
***முத்திரை ஏதுக்கடி - குதம்பாய்***
***முத்திரை ஏதுக்கடி ”*** [4]

கடவுள் என்பதன் உண்மைத்தன்மையை அறிந்த மனிதர்களுக்குத் தேவையற்ற முத்திரைகளும் , சடங்குகளும் எதற்கு என்று கேள்வி எழுப்புகிறார். மனத்துக்கண் ஆசைகள் வளர்த்துக் கொண்டு , புறத்தே முற்றும் துறந்தவர் போல வடிவம் கொண்டு அலைபவர்கள் சிலர் என்றால் , அவர்கள் பின் சென்று நம்பி ஏமாறும் மக்கள் கூட்டம் பலருண்டு என்பதைப் புரிந்து கொண்டு இப்பாடலைப் பாடியுள்ளார்.

***ஈ)பட்டினத்தார்:-***

தமிழ்ச்சித்தர்களிலேயே இன்றியமையாதவராக கருதப்படுபவர் பட்டினத்தார் ஆவார். இவரும் கடவுளை அடையும் புறச்சடங்குகளை மறுத்தவர். சித்தர்கள் யார் என்பதைத் தம் பாடலில் இங்ஙனம் குறிப்பிடுகிறார். “இவர்கள் பார்ப்பதற்கு இயல்பான உலகத்தார் போன்றுதான் இருப்பார்கள். ஆனால் உள்ளேயோ உலகப்பற்றற்று, தேவையற்ற ஆசைகளை நீக்கி வாழ்வார்கள்” என்கிறார்.

***“மாத்தான வத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்***
***நீத்தார் தமக்கொரு நிஷ்டையுண்டோ? நித்தன் அன்புகொண்டு***
***வேர்த்தால் குளித்து பசித்தால் புசித்து, விழிதுயின்று***
***பார்த்தால் உலகத்தார் போல் இருப்பர் பற்றற்றவரே!*** [5]

அதாவது ‘மகத்தான பொருட்கள் பலவற்றையும் , மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, பட்டம், பதவி என இவற்றின் மேல்கொண்ட மயக்கத்தையும் துறந்த சித்தர்கள் , அத்துறவறத்தை வெளிக்காட்ட எவ்வித சிறப்புத் தோற்றத்தையும் கொண்டிருக்க வேண்டியதில்லை. மாறாக அவர்கள் , நித்தன் என்னும் இறைவன் மேல் அன்பு கொண்டு , வேர்த்தால் குளித்தும் , பசித்தால் புசித்தும் , விழித்தும்,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தூங்கியும், பார்த்தால் இயல்பான உலகத்தார் போலத் தான் வாழ்வார்கள். ஆனால் மனதில் மிகவும் மேம்பட்டவர்களாக வாழ்வார்கள். இவர்களை நம்மால் புறத்தோற்றங் கொண்டு கண்டுணர இயலாது ' என்கிறார். இப்படி பாடிய பட்டினத்தாரே இன்னொரு பாடலில் சித்தர்கள் என்னும் ஞானியர்களை சில செயல்களை வைத்துக் கண்டுணரலாம் என்கிறார். அதாவது சித்தர்களை அவர்களுடைய தவமிகு வாழ்விலும், மக்களுக்கு உதவிடும் குணத்திலும் , அருளிலும், அன்பிலும், மனதின் இருள் அகலுமாறு பேசும் அவர்தம் பேச்சிலும் கண்டுணரலாம் என்று கூறுகிறார்.

***"அருளுடையோரைத் தவத்தில்***
***குணத்தில் அருளில் அன்பில்***
***இருளறு சொல்லினும் காணத்தகும்***
***இறைவா கச்சி ஏகம்பனே!***[6]

என்று சித்தர்களைக் கண்டறியும் வழி காட்டுகிறார்.

**உ) சிவவாக்கியர்:-**

சிவவாக்கியம் என்னும் நூல் இயற்றியதால் சிவவாக்கியர் என்று அழைக்கப்படுகிறார்.சித்தர் இலக்கியம் என்னும் தொகுப்பில் இவருடைய பாடல்களே பெரும்பங்கு வகிக்கின்றன. இவரும் கடவுள் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றித் திரிபவர்களைத் தமது பாடலில் சாடுகிறார். மேலும் மருத்துவக் குறிப்புகள் தரும் பல பாடல்களைத் , திருமூலரைத் தொடர்ந்து இவரும் இயற்றியுள்ளார். ஒரு குழந்தை பிறப்பதை மிக அழகாக பின்வரும் பாடலில் விளக்கியுள்ளார்.

***"ஐயிரண்டு திங்களாய் அடங்கி நின்ற தூமைதான்***
***கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டும் ஆகியே***
***மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்***
***துய்ய காயம் ஆனதும் சொல்லுகின்ற தூமையே"***[7]

அதாவது பெண்களுக்குரிய மாத விலக்கு பத்து மாதங்கள் வராமல் அடங்கி நின்ற உதிரமே , கையிரண்டு, காலிரண்டு, கண்ணிரண்டு என்றாகி , நல்லதொரு மெய்யாக திரண்டு வந்து , சத்தம் உணரும் செவியாகவும், சுவையுணரும் நாவாகவும் , மணத்தினை நுகரும் நாசியாகவும் வளர்ந்து நல்ல ஒரு உடலாக வெளிப்படுகின்றது. மக்கள் தீட்டு எனத் தள்ளி வைக்கும் உதிரமே உடலாக உருவெடுக்கின்றது என்ற மருத்துவ உண்மையினைத் தம் பாடலில் பதிவிட்டுள்ளார்.

இது போன்ற பல மருத்துவக்குறிப்புகளை மாணிக்க வாசகனார் , திருமூலர் என சித்தர்கள் பலரும் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**முடிவுரை:-**

இங்ஙனம் நம் முன்னோர்களான சித்தர்கள் பாடி வைத்து விட்டுச் சென்ற பாடல்களில் ,பல செய்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் மேம்பட்டு நிற்பது , இன்றைய உலகத்தினர் புரிந்து கொள்ள வேண்டிய மருத்துவக் குறிப்புகளும் , உணவு முறைகளும்தான். இவற்றைத் தவிர வேதியியல் , இயற்பியல், வானவியல், சோதிடவியல்என புற உலகியல் வாழ்வு பற்றியும் , அதேநேரம் மனமானது பண்பட்டு மெய்யுணர்வு பெறுதல் பற்றியும் தமது பாடல்களில் சிறப்புற கூறிச் சென்றிருக்கின்றனர். இதே கருத்துகளை பல்வேறு நாட்டினைச் சார்ந்த சித்தர்களும் பதிவிட்டிருக்கக் கூடும். எனினும் அனைவருக்கும் முன்னோடியாக தமிழில் சித்தர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முன்னே பாடிச்சென்றிருக்கின்றனர் என்பதே நமக்கான பெருமை. இது நமக்கான சொத்து மட்டுமல்ல , இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களுக்குமான சொத்து ஆகும்.

சித்தர் இலக்கியத்தில் வைக்கப்படவில்லை எனினும் ***'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு***[8] என்றுரைத்த திருவள்ளுவரும் சித்தர் மரபினர்தான்.

**குறிப்புகள்**



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

1. திருமந்திரம், முதல் தந்திரம், கல்வி, ஆறாம் பாடல்
2.திருமந்திரம், எட்டாம் தந்திரம், அவா அறுத்தல், மூன்றாம் பாடல்
3.குதம்பைச்சித்தர் பாடல்கள்
4.குதம்பைச்சித்தர் பாடல்கள்
5.பட்டினத்தார் பாடல்கள்
6.பட்டினத்தார் பாடல்கள்
7.சிவவாக்கியர் பாடல்கள்
8.திருக்குறள், மருந்து அதிகாரம், குறள் எண் - 942

**துணைநின்ற நூல்கள் :-**

1. சித்தர் இலக்கியம் – மீ.ப.சோமு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு , 1988.
2. சித்தா குகை – நந்தா – அருவி வெளியீடு, ஏப்ரல் 2007